முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்
ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்
**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1417

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.08.2023**, புதன்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா
அறம்காக்கும் ஞான தேசிகா
மாறுதலை உலகில் செய்யவேண்டி
மாதவசியாக வந்த குருராஜா
2. அரசனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 31 ம் நாள், 16.08.2023 புதன்கிழமை)
வரமென அரங்கன் உன் மார்க்கம்
வையகம் எங்கிலும் வலம் வர
3. வருகவே உலகில் மாற்றம் உண்டு
வழிமொழிந்து உன் சன்மார்க்கத்தை
முருகா என ஏற்று வரும் மக்கள்
முழுமை தனை அடைவது உறுதியப்பா
4. உறுதி தந்து அரங்கன் உந்தனுக்கு
உயர்வான ஞான வழிகளை ஆறுமுகன் யான்
வரமாகத்தந்து வையகத்தில் நாளும்நாளும்
ஆற்றல் கூட்டி வருகின்றேன்
5. வருகவே உன்பால் சரணாகதி
வையகத்தில கொண்டவர்க்கே
முருகன் என் அருளும் தயவும்
முழுமையான ஞானமும் உண்டுஉண்டு
6. உண்டான உன் தொண்டர்படையென
உலகம் எங்கும் நிரம்பவே
கண்டிடுமே இந்த பேருலகம் பெரும்மாற்றம்
கலியுகமே ஞானயுகமாக ஆற்றல் மாறக்கூடும்

7. கூடவே அற்புதத்தை உன்வழி
குருபரன் முருகன்யான் நடத்திவர
நாடெங்கிலும் இன்னும் உன்ஞானப்படை
நாட்டிடுவேன் பெருகவேண்டுமப்பா

8. அப்பனே உன் தர்மமே அளவில்லா பெருகி நிற்கவே
காப்பாக உலகமெல்லாம் தர்மபலம்
கலியிடரை வெல்லும் வண்ணம் நிலை கூடி
கூடியே உலக மாற்றம் குரு அரங்கன் உன் அவதாரத்தால் ஈடேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–